செ.வெ.எண்.216 நாள்:29.03.2018

## திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் ஏழை பெண்களின் திருமணத்திற்க்கு திருமாங்கல்ய தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டத்தில் 115 பயனாளிகளுக்கு ரூ.39.25 லட்சம் மதிப்பிலான உதவித்தொகை மற்றும் 920 கிராம் தங்கம் ஆகியவைகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வைஷ்ணவி திருமண மண்டபத்தில் சமூக நலத்துறையின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஏழை பெண்களின் திருமணத்திற்கு 8 கிராம் திருமாங்கல்ய தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (29.03.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு 115 பயனாளிகளுக்கு 920 கிராம் தங்கம் மற்றும் ரூ.39.25 லட்சம் மதிப்பிலான உதவித்தொகை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னலமில்லாமல் ஏழை பணக்காரர் வேறுபாடுயின்றி அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண்களுக்கு எவ்வித கவலையும் இருக்க கூடாது என்பதற்காகவே எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். பெண்கள் நன்றாக படித்து பெரிய பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்பதற்காகவே படித்த ஏழை பெண்களின் திருமணத்திற்கு தங்கம் மற்றும் உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பட்டம் மற்றும் பட்டயபடிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50 ஆயிரம் உதவித்தொகை மற்றும் 4 கிராம் தங்கமும், 10 ம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25 ஆயிரம் உதவித்தொகை மற்றும் 4 கிராம் தங்கமும் வழங்கப்பட்டது. பின்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்கம் வழங்கப்படும் என அறிவித்தார்கள். பெண்களின் படிப்பை பாதியில் நிறுத்திவிடக் கூடாது என்பதற்காகவும் ஏழைகள் தங்களின் குழந்தைகளின் திருமணத்திற்காக சிரமபடக் கூடாது என்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தினார்கள். அம்மாவின் அரசு தொடர்ந்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றுள்ளனர். அரசின் திட்டங்களை பெற்றுள்ள நீங்கள் இவைகளை பயன்படுத்தி வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் சமூகநலத்துறையின் மூலம் சங்கரன்கோவில், குருவிகுளம் மற்றும் மேலநீலிதநல்லூர் ஒன்றியங்களை சேர்ந்த பட்டப்படிப்பு படித்த 42

பயனாளிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.21.00 லட்சம் உதவிதொகையும், 10 ம் வகுப்பு படித்த 73 பயனாளிகளுக்கு தலா ரூ.25 வீதம் ரூ.18.25 லட்சம் உதவிதொகையும், அனைவருக்கும் தலா 8 கிராம் தங்கமும் என மொத்தம் 115 பயனாளிகளுக்கு ரூ.39.25 லட்சம் உதவித் தொகையும், 920 கிராம் தங்கமும் இன்று வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவித் திட்டம் பெண்களின் படிப்பை ஊக்கவிக்கும் திட்டமாகும். நமது மாவட்டத்திலும் ஒரு சில சமூகத்தில் குழந்தை திருமணங்கள் செய்யும் பழக்கம் உள்ளது. இது போன்ற திட்டங்களால் படிக்க வைக்க வேண்டும் என்ற என்னமும், சரியான வயதில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு எற்படும். விதவை மருமணம், கலப்பு திருமணம் உள்ளிட்ட பல்வேறு திருமண உதவித்தொகை வழங்கும் திட்டங்களும் உள்ளது. இன்று உதவித்தொகை பெறும் நீங்கள் இத்திட்டம் குறித்து மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண் குழந்தைகளை படிக்க வைக்க ஊக்கப்படுத்திட வேண்டும். சங்கரன்கோவில் பகுதியில் இலவச வைபை வசதி மற்றும் பல்வேறு கட்டிட பணிகள் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகுக்கு தேவையான அடிப்படை வசதி செய்து தரப்படும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா, சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு.தாணுமூர்த்தி, சங்கரன்கோவில் வட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், டான்பெட் துணை தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், முக்கிய பிரமுகர் திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.